**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 307 of 2018**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : மகபுநிஷா** | **Father/Husband's Name: ஷாகுல்ஹமீது** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.11.2024**

**A1,A2 absent. 355 BNSS PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி அம்பளார் தெருவில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கடந்த 16.10.2017 ம் வருடம் மதியம் 3.30 மணியளவில் எனக்கு சொந்தமான வீட்டை வாடகைக்கு விட்டிருந்தேன். வாடகைக்கு இருந்தவர்கள் காலி செய்ததால் அந்த வீட்டை சுத்தம் செய்வதற்காக நானும் எனது மருமகள் ரகியானா, செரினா இருவரும் மேற்படி வீட்டிற்கு சென்றோம். அப்போது எனது மகள் ஆயிஷாம்மாள், எனது மருமகன் சேக் தாவூத் மற்றும் மகள் ராபியம்மா, மகன் காஜாமைதீன் என்பவர்கள் எனது வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே அத்துமீறி நுழைந்திருந்தார்கள். அப்போது நான் மருமகள்களுடன் சென்ற போது என்னை பார்த்து எனது மகள் ஏண்டி தேவிடியா இந்த வீட்டிற்குள்ள வர என எதிரி ஆயிஷாம்மாள் என்னை பார்த்து மிகவும் கொச்சையான வார்த்தையால் திட்டினார் பின்னர் மேற்படி எதிரிகள் 4 பேரும் என்னை அடித்து கீழே தள்ளிவிட்டனர். தள்ளிவிட்டதில் எனக்கு நெஞ்சில் வலி ஏற்பட்டது. பின்னர் எனது மகன் காதர்ஷா என்பவருக்கு செல்போன் மூலம் தகவல் சொல்லி அவர் சம்பவ இடத்திற்கு வந்தார். சம்பவ இடத்திற்கு வந்த எனது மகன் காதர்ஷாவையும் மேற்படி எதிரிகள் 4 பேரும் கையாலும் அடித்து தாக்கினார். பின்னர் எதிரிகள் என்னையும் , எனது மகனையும்

பார்த்து கொலைபண்ணிவிடுவேன் என மிரட்டினார்கள். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். பின்னர் எனக்கு எதிரிகள் அடித்ததில் எனக்கு மயக்கம் ஆனதால் என்னை எனது மகன் ஒரு ஆட்டோ மூலம் பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார். பின்னர் போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் வாக்குமூலம் மற்றும் புகார் பெற்று கொண்டனர். பின்னர் இரண்டு வருடம் கழித்து எனது மகனை காஜாமைதீன் என்பவர் அரிவாளால் வெட்டிவிட்டார். மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். மேற்படி அரிவாளால் வெட்டியதை நான் இந்த வழக்கு கொடுத்ததற்காக வெட்டி கொலைமிரட்டல் விடுத்தார். அந்த வழக்கும் இந்நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

2. இல்லை

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.11.20 17:28:39 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 307 of 2018**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : காதர்ஷா** | **Father/Husband's Name: ஷாகுல்ஹமீது** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.11.2024**
**A1,A2 absent. 355 BNSS PFA.**
**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது பழனி அம்பளார் தெருவில் குடியிருந்து, விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புகாரை நான் தான் எழுதினேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அவர் எனது அம்மா ஆவார். கடந்த 16.10.2017 ம் வருடம் மதியம் 3.00 மணிக்கு மேல் எனது மனைவி செரினா செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எனது அம்மா அம்பளார் தெருவில் உள்ள வீடு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அந்த வீட்டின் ஒரு குடித்தனம் காலியாக இருந்ததால் அந்த வீட்டை சுத்தம் செய்வதற்காக சென்றிருந்தார்கள் அப்போது என் அம்மாவும், எனது மனைவி செரினாவும், எனது அண்ணி ரகைனா பேகம் என்பவரும் உடன் சென்றிருந்தார்கள். இந்நிலையில் எனக்கு செல்போன் மூலம் எனக்கு தகவல் வரவே அதில் என்னுடைய மனைவி என்னிடம் ஆயிஷாம்மாள், அவருடைய கணவர் சேக் தாவூத், மகன் காஜாமைதீன், மகள் ராபியம்மாள் என்பவர்கள் காலியாக இருந்த வீட்டின் பூட்டை உடைத்து வீட்டினுள் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது எனது அம்மா ஆயிஷாம்மாள் என்ற எதிரியிடம் வீட்டை எதுக்கு உடைத்து உட்கார்ந்திருக்கிறாய் என கேட்டதற்கு எனது அம்மாவை அசிங்கமான வார்த்தையால் தேவிடியா என பேசி எனக்கும் இந்த வீட்டில் பங்கிருக்கிறது என்றும் சொல்லி எனது அம்மாவை கையால் அடித்து நான்கு பேரும் சேர்ந்து கீழே தள்ளிவிட்டனர். கீழே விழுந்ததில் எனது அம்மாவிற்கு நெஞ்சில் வலி ஏற்பட்டது. மயக்கமாக இருந்ததாகவும் என்னிடம் எனது மனைவி செரினா சொன்னார். பின்னர் சம்பவம் கேள்விப்பட்டு அவர்**

அழைத்த அரை மணி நேரம் கழித்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ இடமான வீட்டிற்கு சென்ற போது ஆயிஷாம்மாள், கணவர் சேக்தாவூத் ஆகிய இருவரும் சம்பவ இடத்தில் வீட்டின் ஓட்டை உடைத்து கொண்டு வீட்டினுள் இருந்தார்கள். பின்னர் நான் எதிரிகளிடம் எதுக்கு வீட்டை உடைத்து உட்கார்ந்திருக்க என கேட்டதற்கு என்னை தேவிடியா மகனே என கெட்ட வார்த்தை சொல்லி திட்டி எனது சட்டையை கிழித்து , இருவரும் அவர்களது நகத்தால் என்னுடைய உடம்பில் முழுவதுமாக கீறி விட்டார்கள். என்னையும் எதிரிகள் வீட்டினுள் நுழைய விடாமல் வீட்டின் வாசப்படியில் இருந்தே கீழே தள்ளிவிட்டார்கள். கீழே விழுந்ததில் எனக்கு உடம்பு வலி ஏற்பட்டது. எனக்கு மயக்கம் வருவது போல் இருந்தது. பின்னர் நான் மயக்கத்தில் இருந்த எனது அம்மாவையும் , நானும் ஒரு ஆட்டோவில் பழனி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம். பின்னர் 7 மணியளவில் நகர் காவல் நிலையத்தில் இருந்து போலிசார் என்னிடம் புகார் மற்றும் வாக்குமூலம் பெற்றுகொண்டனர். பின்னர் 2 வருடம் கழித்து 19.09.2019 அன்று இரவு 10 மணியளவில் காஜாமைதீன் என்ற எதிரி நான் வயலுக்கு சென்று வீடு திரும்பும் போது எனது வீட்டின் முன்பு இருட்டில் நின்று கொண்டு நான் இரு சக்கர வாகனத்தில் வந்த போது என்னை அரிவாளால் வெட்டினார். பின்னர் நான் எதிரியை தடுத்த போது எனது இடது கையில் அருவாள் பட்டு எலும்பு உடைந்து போனது. பின்னர் எனது இடது கையில் மோதிர விரலில் அரிவாளால் வெட்டியதில் நரம்பு துண்டித்து தற்போது வரை விரல் செயல் இழந்து விட்டது. பின்னர் எதிரி உன்னை கொன்றால் தான் எனக்கு சொத்து கிடைக்கும் எனவும் சொல்லி அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அதில் நான் மயக்கம் அடைந்துவிட்டேன் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சத்தம் போட்டதால் எதிரி சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார். பின்னர்அரசு மருத்துவமனை சென்று நான் சிகிச்சைக்கு சேர்ந்தேன். மேற்படி வழக்கு குறித்து CC.131/2019 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஏற்கனவே இருந்த முன் பகையை வைத்து இந்த சம்பவம் நடைபெற்றது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.11.20 17:28:51 +0530

2. இல்லை

நீதித்துறை நடுவர்,

பழனி